பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

"நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்" (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 10 றபீஉல் அவ்வல் - 1433 ஜனவரி - 2012

# வாழ்வின் அழகிய முன்மாதிரி

அல்லாஹ்வின் உயர்தரமான மனிதப்படைப்புகளுள் மிகச் சிரேஷ்டமான ஒருவர் 1400 ஆண்டுகள் கடந்த பின்னரும் உலகம் முழுவதும் நிமிடத்துக்கு நிமிடம் நினைவுபடுத்தப்படுகிறார் என்றால் அவர் வேறு யாராக இருக்க முடியும் ...? அல்லாஹ்வின் இறுதித் தூதர் நமது ஈருலகத் தலைவர் முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர!

அறியாமை இருளில் தத்தளித்த உலகை இஸ்லாம் எனும் ஒளி பாய்ச்சி அறிவியல் பாதையில் வழிநடத்திய பெருமானார் அவர்களின் நாமத்தை உலகம் முழுதும் நிமிடத்துக்கு நிமிடம் ஒலித்திடும் அதானிலும் தொழுகைகளிலும் உரைகளிலும் உரையாடல்களிலும் உச்சரித்திடும் ஏற்பாட்டை உலகைப் படைத்தாளும் அல்லாஹ்வே ஏற்படுத்தியுள்ளான் என்பதன் மூலம் நபிகளாரின் மேன்மையையும் உயர்வையும் ஊகித்துக்கொள்ளலாம்.

'(நபியே!) உங்களை நாம் உலகத்தாருக்கு ஓர் அருளாகவேயன்றி அனுப்பவில்லை' (22 : 107)

'நபியே! நிச்சயமாக நாம் உம்மை சாட்சியாளராகவும் நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் மேலும் அல்லாஹ்வின் பால் அவனின் அனுமதியோடு அழைப்பவராகவும் பிரகாசிக்கும் ஒளிவிளக்காகவும் அனுப்பியுள்ளோம்' (33 : 45, 46)

'(நபியே!) நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்தில் இருக்கிறீர்' (68 : 4)

'அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஆதரவுவைத்து அல்லாஹ்வை அதிகம் நினைவுகூருவோருக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது'(33 : 21)

அல்லாஹ் தனது அருள்மறையில் எடுத்தியம்பும் நபிகளாரைப் பற்றிய புகழாரங்கள் இவை. படைப்பாளனே புகழ்ந்து விட்ட பின்பு படைப்புகளால் வேறு எவ்வாறு இதை விட உயர்வாகப் புகழ்ந்திட முடியும்?

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த பல தலைவர்கள், சிந்தனையார்களின் கருத்துகளில் பல இந்த நூற்றாண்டுக்கு பொருந்தாமல் போய்விடுகின்றன. ஒரு காலத்தில் உலக அளவிலேயே மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய அவ்வாறான எத்தனையோ கருத்துகள் இன்றைய காலத்துக்குப் பொருத்தமற்றவை என்று ஒதுக்கப்பட்டு வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் தூக்கி வீசப்பட்டுவிட்டன.

ஆனால் 14 நூற்றாண்டுகளுக்கு முன் நபிகளார் கூறிய வார்த்தைகளில் எந்த ஒரு வார்த்தையேனும், அவர்கள் செயற்படுத்திய நடைமுறைகளில் எந்தவொரு நடைமுறையேனும் இன்றைய நவீன யுகத்துக்கு பொருத்தமற்றது என்று ஒதுக்கிட முடியவில்லை. மாற்று மதங்களைச் சேர்ந்த பெரும் அறிவியலாளர்களும் சிந்தனையாளர்களும் நபிகளாரின் சொல், செயல் அனைத்தும் இன்றைக்கும் இறவாவரம் பெற்றுத் திகழ்வதையிட்டு மலைத்துப் போய் நிற்கிறார்கள்.

ஒரு சிலர் இஸ்லாத்தின் மீது கொண்ட காழ்ப்புணர்வு, பகைமை போன்றவை காரணமாக நபிகளாரின் சில வழிகாட்டல்களை விமர்சிக்கத் தலைப்பட்டார்களேயன்றி, உண்மையில் அத்தகைய விமர்சனங்களையும் தாண்டி, இன்று நாளாந்தம் நபியவர்களின் நடைமுறைகளினால் கவரப்பட்டு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வோரின் எண்ணிக்கை முழு உலகிலும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

எத்தனையோ பெரும் பெரும் அறிஞர்களின் கருத்துகளும் சிந்தனைகளும் ஒரு நூற்றாண்டுக்குள்ளேயே ஒதுக்கித்தள்ளப்படும் நிலையில் 14 நூற்றாண்டுகள் கடந்தும் நபிகளாரின் போதனைகள், வழிகாட்டல்கள், சிந்தனைகள் இன்றளவும் உயிர்வாழ்வதற்குக் காரணம் என்னவென்று சிந்திக்கும் போது, நபியவர்கள் பேசிய

வார்த்தைகள் யாவும் அவர்களது மனோ இச்சையோ, சொந்தக் கற்பனைகளோ அல்ல, அவை முழுவதும் ஏக இறைவனின் தூய வஹி என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அல்லாஹ் இதை பின்வருமாறு உறுதிப்படுத்துகிறான்: '(அல்லாஹ்வினால்) அறிவித்துக்கொடுக்கப்படும் வஹியைத் தவிர அவர் தன் மனோ இச்சைப்படி எதையும் பேசுவதில்லை'(53 : 3, 4).

அத்தகைய நபியையும் அவர்கள் கொண்டு வந்த அப்பழுக்கற்ற மார்க்கத்தையும் பகுதியளவிலோ, ஒரு சில விடயங்களிலோ அல்லாமல் முழுமையாக பின்பற்றுவதில்தான் முழு மனித சமூகத்திற்கும் ஈருலகிலும் விடிவும் வெற்றியும் நிம்மதியும் தங்கியுள்ளன.

மார்க்க விடயங்களையும் த.ஃவா செய்திகளையும்
உங்கள் கையடக்கத் தொலைபேசியில் அறிந்துகொள்ள
follow evrtj என்று Type செய்து 40404க்கு SMS அனுப்பி
வையுங்கள். இது முற்றிலும் இலவசமானது.
(Airtel வலையமைப்பைத் தவிர)

ஆகவே, நிம்மதியையும் சந்தோஷத்தையும் எங்கெங்கெல்லாமோ தேடியலைவோர் நபிகளாரின் சொற்களையும் செயல்களையும் தமது வாழ்வில் நடைமுறைப்படுத்திப் பார்க்கட்டும் ! நிம்மதியும் மகிழ்ச்சியும் உள்ளத்தில் மட்டுமல்ல, இல்லத்திலும் உதிக்கும்.

பல்வேறு பிரச்சினைகளுக்குள் சிக்குண்டு அவற்றுக்கு தீர்வு காண முடியாமல் தத்தளிப்போர் நபியின் வாழ்வில் அத்தீர்வுகளைத் தேடிப்பார்க்கட்டும் ! நிலையான தீர்வுகள் இலகுவாக கிடைக்கும்.

பிற மத கலாசாரங்களையும் நடைமுறைகளையும் நாகரிகம் எனக் கருதி தமது வாழ்வை அதற்கேற்ப அமைத்துக்கொண்டோர் சற்று அதிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு தமது ஒவ்வொரு செயலிலும் தமது குடும்பம், பிள்ளைகள் மத்தியிலும் நபியின் வாழ்வை முழுமையாக பின்பற்றிப் பார்க்கட்டும். அர்த்தமுள்ள, முழுத் திருப்தியுடன் கூடிய வாழ்வு அவர்களைப் பின்தொடரும்.

மார்க்க அனுஷ்டானங்களிலும் வணக்க வழிபாடுகளிலும் நபியவர்கள் கூறிய வழிகாட்டல்களை ஒருபக்கம் ஒதுக்கிவைத்துவிட்டு, வேறு யாரோ கூறிச்சென்ற விடயங்களை மார்க்கமாக்கி பின்பற்றுவோர், சற்று நிதானித்து நபியவர்களின் கூற்றுகள் எவை என்பதை ஆராய்ந்து பார்க்கட்டும். நபியவர்களைத் தவிர மார்க்க வழிகாட்டி வேறு யாரும் தேவையில்லை என்ற முடிவுக்கு அவர்கள் வருவார்கள்.

ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது என்னவெனில், நபியின் வாழ்வு பற்றியும் மனித வாழ்வின் அனைத்துக் கட்டங்களுக்கும் தேவையான அவர்களது வழிகாட்டல்கள் பற்றியும் தேடித்தேடி அறிவதும் பின்னர் அவற்றை வாழ்வில் நடைமுறைப்படுத்துவதுமேயாகும்.

உலகில் பட்டங்களைப் பெற்றுக்கொள்ளவும் பணத்தைச் சம்பாதிக்கவும் வாய்ப்பு வசதிகளைப் பெருக்கிக்கொள்ளவும் பல்வேறு அறிவுத் துறைகளைக் கற்கவும் எடுக்கப்படும் முயற்சிகளினதும் பிரயத்தனங்களினதும் அளவுக்கேனும் நபியின் வழிகாட்டல்களை அறிந்துகொள்வதற்கும் மார்க்கத்தைக் கற்றுக்கொள்வதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுமாயின் சுபீட்சமும் அமைதியும் நிறைந்த உலகையும் நிம்மதியான வாழ்வையும் காணமுடியும்.

இவ்வுலகில் அந்த நபியை ஓர் உன்னத சமூகம் அணுவணுவாகப் பின்பற்றியது. அந்த நபியைப் பின்பற்றுவதற்காகவே விபரிக்க முடியாதளவு தியாகங்களைச் செய்தது. அதனால் அச்சமூகம் வாழ்வில் சில சில கஷ்டங்களை அனுபவித்தாலும் அந்த வாழ்வில் சந்தோஷமும் நிம்மதியும் நிறைந்திருந்தன. முடிவே இல்லாத மறுமை வாழ்விலோ நிரந்தர வெற்றியைப் பெற்றுக்கொண்டது. அந்த சமூகம்தான் ஸஹாபாக்கள் எனப்படும் சமூகம். நபியின் வாழ்வைப் பின்பற்றி ஈருலகிலும் வெற்றிகண்ட சமூகம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அந்த உத்தம நபி மீதும் அவர்களை அன்று தொடக்கம் இன்று வரை பின்பற்றிய, பின்பற்றுகின்ற அனைவர் மீதும் தனது அருளைச் சொரிவானாக. இவ்வுலகில் அந்த நபியை முழுமையாகப் பின்பற்றி மறுமையில் சுவனத்தில் அவர்களுக்கு மிக அருகில் குடியிருக்கும் பாக்கியத்தை அனைவருக்கும் தந்தருள்வானாக.

- இப்னு அப்திர் றஸ்ஸாக் -

# நபிகளாரின் வாழ்வில்...

ஒரு தடவை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது உட்கார்ந்த நிலையில் தொழுகை நடாத்தினார்கள். நாங்களும் அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுதோம். அவர்கள் திரும்பிப் பார்த்தபோது நாங்கள் நின்றுகொண்டிருப்பதைக் கண்டார்கள். சைகை மூலம் எங்களை உட்காரச் சொன்னார்கள். நாங்கள் உட்கார்ந்த நிலையில் அவர்களை பின்பற்றித் தொழுதோம். தொழுகையை முடித்தவுடன் "ரோம, பாரசீக மன்னர்கள் உட்கார்ந்திருக்க, மக்கள் நின்றுகொண்டிருப்பது போன்ற செயலை செய்ய முற்பட்டுவிட்டீர்களே! இனிமேல் அவ்வாறு செய்யாதீர்கள், உங்கள் தலைவர்களை பின்பற்றித் தொழுங்கள், அவர்கள் நின்று தொழுகை நடாத்தினால் நீங்கள் நின்று தொழுங்கள். அவர்கள் உட்கார்ந்து தொழுகை நடாத்தினால் நீங்களும் உட்கார்ந்து தொழுங்கள்" என்று கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

---

நான் ஹியரா என்னும் ஊருக்குச் சென்றேன். அங்குள்ளவர்கள் தமது தலைவருக்கு சிரம்பணிந்து கும்பிடுவதைப் பார்த்தேன். இவ்வாறு சிரம்பணிவதற்கு நபியவர்களே அதிக தகுதியுடையவர்கள் என்று எனக்குள் கூறிக் கொண்டேன். நபிகளாரிடம் வந்து, "நான் ஹியரா என்னும் ஊருக்குச் சென்ற போது மக்கள் தமது தலைவருக்கு சிரம்பணிவதைக் கண்டேன். நாங்கள் சிரம்பணிந்திட நீங்களே அதிகம் தகுதியுடையவர்" என்று கூறினேன். அதற்கு நபியவர்கள் "(எனது மரணத்திற்குப் பின்) எனது அடக்கஸ்தலத்தை கடந்து செல்ல நேர்ந்தால் அதற்கும் சிரம்பணிவீரோ?" எனக் கேட்டார்கள். நான் "இல்லை" என்று கூறினேன். அதற்கு நபிகளார், "ஆம் அவ்வாறு செய்யக்கூடாது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு சிரம்பணியலாம் என்றிருந்தால், கணவனுக்காக மனைவியை சிரம்பணியச் சொல்லியிருப்பேன்" என்று கூறினார்கள். (அறிவிப்பவர் : கைஸ் இப்னு ஸஅத் றழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத்)

---

நபியவர்களுக்கு பாத்திரத்தில் பால் கொண்டுவரப்பட்டது. அதில் சிறிதளவு அவர்கள் அருந்தினார்கள். அவர்களின் வலப்புறத்தில் சிறிய வயதுடைய ஒரு இளைஞர் இருந்தார். இடப்பக்கத்தில் பல பெரியவர்கள் இருந்தனர். அப்போது நபியவர்கள் "இளைஞரே! பெரியவர்களுக்கு முதலில் கொடுக்க எனக்கு அனுமதி தருகிறீரா?" என்று கேட்டார்கள். அதற்கு இளைஞர், "உங்கள் மூலம் எனக்குக் கிடைக்கும் பாக்கியத்தை மற்றவருக்கு நான் கொடுக்கமாட்டேன்" என்று கூறினார். உடனே நபிகளார் அந்தப் பாலை இளைஞருக்கு முதலில் கொடுத்துவிட்டு பின்னர் மற்றவர்களுக்கு கொடுத்தார்கள். (நூல் : ஸஹீஹுல் புஹாரி)

---

நபியவர்களுக்கு ஆடு ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அப்போது உணவுகள் குறைவாக இருந்த காலம். தமது குடும்பத்தாரிடம் "இந்த ஆட்டை சமையுங்கள்" என்று கூறினார்கள். நான்கு பேர் சுமக்கக் கூடிய பெரிய பாத்திரம் ஒன்றில் உணவு வைக்கப்பட்டு கொண்டுவரப்பட்டது. உணவு கிடைக்காத ஸஹாபாக்கள் எல்லோரும் அழைக்கப்பட்டார்கள். உணவுத் தட்டைச் சுற்றி அனைவரும் அமர்ந்து சாப்பிட்டார்கள். நபியவர்களும் அவர்களுடன் அமர்ந்து கொண்டனர். கூட்டம் அதிகமாகச் சேர்ந்ததால், நபியவர்கள் மண்டியிட்டு அமர்ந்து மற்றவர்களுக்கு இடம்கொடுத்தார்கள். அப்போது ஒரு கிராமவாசி "ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?" அதற்கு நபியவர்கள் "அல்லாஹ் என்னை அடக்குமுறை செய்பவனாகவோ, கர்வம் கொண்டவனாகவோ ஆக்கவில்லை. பெருந்தன்மைமிக்க அடியானாகவே ஆக்கியுள்ளான்" என்று கூறினார்கள். (நூல் : அபூதாவூத்)

# அல்குர்ஆன், ஹதீஸின் பார்வையில் மௌலித்

றபீஉல் அவ்வல் மாதம் பிறந்துவிட்டால் பிறை ஒன்று தொடக்கம் பிறை 12 வரை பள்ளிவாயல்களிலும் பல வீடுகளிலும் ஸுப்ஹான மௌலித் ஓதும் வழக்கம் பல்லாண்டுகளாக பல முஸ்லிம்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. தொழுகை, நோன்பு போன்ற இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுக்கு கொடுக்கப்படாத முக்கியத்துவம் மௌலித் ஓதுவதற்கு வழங்கப்படுவதை யாரும் மறுக்க முடியாது. வெள்ளை விரிப்புகள் விரிக்கப்பட்டு, ஊதுவத்திகள் கொழுத்தப்பட்டு மணம் கமழ, ஒப்பனைகள், அலங்காரங்களோடு மௌலித் சபைகள் அரங்கேற்றப்படுவதன் மூலம் முஸ்லிம் சமூகம் எந்தளவுக்கு மௌலித் ஓதுவதை புனிதமாக கருதி செயற்பட்டு வருகிறது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

தொழாதவர்கள், நோன்பு நோற்காதவர்கள் கூட மௌலித் ஓதுவதை ஒரு பெரும் வணக்கமாக கருதி பக்திப் பரவசத்தோடு அதில் ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடியும். மற்றும் பலர் தங்களது தேவைகள் நிறைவேறினால், கஷ்டங்கள் நீங்கினால் றபீஉல் அவ்வல் மாதம் 12 நாட்கள் ஸுப்ஹான மௌலித் ஓதுவதாக நேர்ச்சை கூட வைத்து, அதற்காக ஆயிரக்கணக்கில் செலவு செய்து இச்செயலை நிறைவேற்றிவருவதையும் அவதானிக்க முடியும்.

ஒரு செயல் வணக்கமாக மாற வேண்டுமெனில் அச்செயலை செய்யுமாறு அல்லாஹ் அல்குர்ஆனில் கூறியிருக்க வேண்டும், அல்லது நபியவர்கள் தங்களது ஹதீஸ்களில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படை விதியாகும். நபியவர்கள் கூறினார்கள்: ‘நமது கட்டளையின்றி யாரேனும் ஒரு அமலைச் செய்தால் அது (அல்லாஹ்வினால்) நிராகரிக்கப்படும்’ (ஸஹீஹ் முஸ்லிம்). மேலும் நபியவர்கள் கூறும் போது ‘நமது இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யாரேனும் உருவாக்கினால் அது அல்லாஹ்வினால் நிராகரிக்கப்படும்’ என்றும் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).

நாம் தொழுகிறோம், நோன்பு நோற்கிறோம், ஸதகா, திக்ர் போன்ற மற்றும் பல செயல்களை வணக்கமாக நிறைவேற்றுகிறோம். ஏனெனில் இவை பற்றி அல்குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் மௌலித் ஓதுவது பற்றி ஒரு வார்த்தை கூட அல்குர்ஆனிலும் இல்லை, ஹதீஸ்களிலும் இல்லை. அவ்வாறெனில் அது எவ்வாறு வணக்கமாக இருக்க முடியும்?

ஸுப்ஹான மௌலித், முஹ்யித்தீன் மௌலித் போன்றவை சில வருடங்களுக்கு முன் வாழ்ந்து மறைந்த சில கவிஞர்களின் கற்பனைகளில் உதித்த வரிகளாகும். மனிதக் கற்பனைகள் எப்படி வணக்கமாக முடியும் என்று நாம் சிந்திக்கக் கூடாதா?

அறபு மொழியில் இந்த மௌலித்கள் இருப்பதனால் இவை வணக்கமாகி விட முடியுமா? அவ்வாறெனில் ஜாஹிலிய்யா காலத்தில் பல புலவர்கள் பல்வேறு உயர் இலக்கிய நடைகொண்ட தரமான கவிதைகளை அறபு மொழியில் புனைந்திருக்கிறார்களே... அவற்றை நாம் வணக்கமாக கருத முடியுமா? இன்றைய நவீன காலத்திலும் கூட அறபு நாடுகளில் வாழும் பல கவிஞர்கள அர்த்தமற்ற, மார்க்கத்துக்கு முரணான கவிதைகளையும் பாடல்களையும் இயற்றுகிறார்களே... அறபு மொழியில் இருப்பதற்காக, அந்தக் கவிஞர்கள் முஸ்லிம்கள் என்ற பெயரில் இருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் எழுதும் பாடல்களையும் கவிதைகளையும் பள்ளிவாசல்களில் அரங்கேற்ற முடியுமா?

நல்ல கருத்துள்ள கவிதைகள், பாடல்களாக இருந்தால் கூட சாதாரண மனிதர்கள் இயற்றியவற்றை வணக்கமாக நாம் கருதிவிட முடியுமா? வணக்கம் என்ற அந்தஸ்தைப் பெறுவதாயின் ஒன்றில் அல்லாஹ் குறிப்பிட்டிருக்க வேண்டும், அல்லது நபிகளார் குறிப்பிட்டிருக்க வேண்டும். அல்லாஹ் அல்குர்ஆனில் ‘நாம் நபிக்கு கவிதையைக் கற்றுக்கொடுக்கவுமில்லை, அது அவர்களுக்கு அவசியமுமில்லை’ என்று குறிப்பிடுகிறான் (36 : 69). ஆகவே, நபியவர்களுக்கே தெரியாத ஒரு விடயம் வணக்கமாக எப்படி இருக்க முடியும்?

பள்ளிவாசல்களில் 12 நாட்கள் தொடராக இந்த மௌலித் பாடப்படுகிறது. நபிகளார் தமது 23 வருட நபித்துவ வாழ்வில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு 12 நாட்கள் மதீனாவிலிருந்த ஏதாவதொரு பள்ளிவாசலில் இவ்வாறு அமர்ந்திருந்து ஸுப்ஹான மௌலித், முஹ்யித்தீன் மௌலித் ஆகியவற்றைத்தான் படிக்காவிட்டாலும் வேறு ஏதாவது ஒரு மௌலித் பாடியதாக ஒரு ஆதாரத்தையேனும் முன்வைக்க முடியுமா?

இவ்வாறு கூறும் போது சிலர் ஒரு சம்பவத்தை ஆதாரமாக முன்வைப்பார்கள். ஹஸ்ஸான் இப்னு தாபித் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் மஸ்ஜிதுந் நபவியிலே கவிதை பாடுவதற்கு நபியவர்கள் அனுமதித்தார்கள். அதற்கேற்ப அவர்களும் நபியவர்களையும் ஏனைய ஸஹாபாக்களையும் புகழ்ந்தும் காபிர்களை இகழ்ந்தும் கவிதை பாடினார்கள். இது ஆதாரபூர்வமான சம்பவம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

நபியவர்களின் காலத்தில் காபிர்கள் தங்களது கவிதைத் திறமையைப் பயன்படுத்தி இஸ்லாத்தையும் நபியவர்களையும் ஸஹாபாக்களையும் மிக மோசமாக சித்தரித்து கவிதைகளைப் பாடித்திரிந்த வேளை, அதற்குப் பதிலடியாக அன்றைய ஸஹாபாக்களுக்கு மத்தியிலேயே மிகச் சிறந்த கவிப் புலமையைப் பெற்றிருந்த ஹஸ்ஸான் இப்னு தாபித் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் இஸ்லாத்தையும் நபியவர்களையும் ஏனைய முஸ்லிம்களையும் புகழ்ந்து பாடுவதற்கு அனுமதி கோரிய போது அன்றைய தேவையை உணர்ந்து நபியர்கள் அதற்கு அனுமதி வழங்கினார்கள். சிறந்த கருத்துகளைக் கொண்ட கவிதை ஒன்றை ஒருவர் பாடினால் நாம் அதை அங்கீகரிப்பது போன்றுதான் நபியவர்களும் அங்கீகரித்தார்கள். இது ஒரு சாதாரண நிகழ்வேயன்றி, நபியவர்கள் அதை ஒரு வணக்கமாக அங்கீகரிக்கவில்லை. இஸ்லாத்தில் வணக்கம் என்பதற்கான முக்கியமான பண்பு நபியவர்களால் அது தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டிருக்கும். அந்த ஸஹாபி பாடியதற்குப் பின்னரேனும் நபியவர்கள் அதை தொடராக செய்யவில்லை என்பதிலருந்தே கவிதை பாடுவது வணக்கமல்ல என்பது புலனாகிறது.

ஹஸ்ஸான் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் வணக்கம் என்ற அடிப்படையில் இல்லாமல் சாதாரணமாகத்தான்

பாடினார்கள், நாங்களும் அவ்வாறே வணக்கமாக அன்றி சாதாரணமாகவே மௌலித் படிக்கிறோம் என்று சிலர் வாதிடுவர். இது தங்களது செயலை நியாயப்படுத்துவதற்காக கூறிடும் வெற்று வார்த்தையே அன்றி உண்மையல்ல. மௌலித் படிப்பதை வணக்கமாக கருதவில்லையென்றால் ஏன் இத்தனை ஏற்பாடுகள், ஆயத்தங்கள், செலவுகள் செய்ய வேண்டும்? தொழுகை போன்ற வணக்கங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை விட மௌலித் பாடப்படும் இடங்களுக்கு இவர்கள் வழங்கும் முக்கியத்துவத்தை நோக்கினாலே நிச்சயமாக இவர்கள் இதனை வணக்கமாக கருதியே செய்கிறார்கள் என்பது தெட்டத்தெளிவாகி விடும்.

இதே வேளை இன்னுமொன்றைக் குறிப்பிட வேண்டும். ஹஸ்ஸான் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் பாடிய பாடலில் பொய்யோ, மார்க்கத்துக்கு முரணான கருத்துகளோ இருக்கவில்லை. மார்க்கத்திற்கும் நபியவர்களுக்கும் வலுச்சேர்க்கும் கருத்துகளே இருந்தன. ஆனால், ஸுப்ஹான மௌலித், முஹ்யித்தீன் மௌலித் போன்றவற்றிலோ பக்கத்துக்குப் பக்கம் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்ற வரிகளும் கட்டுக்கதைகளும் நபியவர்களின் வாழ்வில் நடந்திராத பொய்களும் நிறைந்துபோயுள்ளன. இம் மௌலித் பாடல்களை எழுதிய கவிஞர்களை அல்லாஹ் மன்னிப்பானாக. அவர்கள் அறிந்தோ, அறியாமலோ இவற்றை எழுதிவிட்டார்கள். பிழைகள் நிறைந்திருக்கின்றன என்பது தெளிவாகிவிட்டால் அவற்றிலிருந்து விடுபடுவதுதான் அல்லாஹ்வையும் அவனது நபியையும் நேசிக்கின்ற உள்ளங்களின் உயர்ந்த பண்பாகும்.

அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்ற ஷிர்க்கான பாடல் வரிகள் ஸுப்ஹான மௌலிதில் உள்ளனவா என்று பலர் ஆச்சரியத்தால் கண்களை அகல விரிக்கக் கூடும். ஆம். அத்தகைய வரிகள் சிலவற்றைக் கவனியுங்கள்:

'யாநபி ஸலாம் அலைக்கும்' என்ற முதல் பாடலில்...
நீங்களே பாவங்களை மன்னிப்பவர், அழித்தொழிக்கும் குற்றங்களையும் மன்னிப்பவர்.
கஷ்டங்களை நீக்கக் கூடியவரும் நீங்களே.
என் பாவங்களை நன்மைகளாக மாற்றுங்கள்

அடியார்கள் பாவம் செய்தால் அவற்றை மன்னிக்கும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு. இவ்வாறே கஷ்டங்கள், துன்பங்களை நீக்கும் அதிகாரமும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு. வணக்கங்களை அல்லாஹ்வுக்கு மாத்திரமே நிறைவேற்ற வேண்டும் என்பது போன்று நமது பாவங்களை மன்னிக்குமாறும் கஷ்டங்களை நீக்குமாறும் அல்லாஹ்விடம் மாத்திரமே பிரார்த்திக்க வேண்டும். அல்லாஹ் அல்குர்ஆனில் கேட்கிறான்:
'அல்லாஹ்வைத் தவிர பாவங்களை மன்னிப்பவன் யார்?' (அல்குர்ஆன் 3:135)
மேலும் அல்லாஹ் கூறுகிறான்: 'தமக்குத் தாமே தீங்கிழைத்துக்கொண்ட என் அடியார்களே! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கையிழந்து விடாதீர்கள். அல்லாஹ் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பான். அவன் மன்னிப்பவன்' (39:53)
நபியவர்களே ஒரு நாளைக்கு நூறு தடவைகள் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருபவர்களாக இருந்தார்கள் (முஸ்லிம்). இவ்வாறிருக்கும் போது அல்லாஹ்விடம் கேட்க வேண்டிய பாவ மன்னிப்பை இப்பாடலில் கவிஞர் நபியிடம் கேட்கிறார். இது இணைவைத்தலன்றி வேறு என்னவாக இருக்க முடியும்? இத்தகைய இணைவைப்பை தகர்ப்பதற்காகத்தானே நபிமார்கள் அனைவரையும் அல்லாஹ் இவ்வுலகில் தோற்றுவித்தான்!

'ஸல்லூஅலா கைரில் இபாத்' என்ற பாடலில்...
புனிதம் மிக்க ஹரம் ஷரீபில் அடங்கியுள்ள பூமான் நபியிடம் புகலிடம் தேடிக்கொள்

புகலிடம் வழங்குவது, அபயம் அளிப்பது, பாதுகாப்பது அனைத்தும் அல்லாஹ்வின் அதிகாரங்களில் உள்ளதாகும். பாதுகாப்பு வழங்குமாறும் அபயம் அளிக்குமாறும் அல்லாஹ்விடம் மாத்திரமே கோர வேண்டும். அல்லாஹ் நபியைப் பார்த்து கூறுகிறான்: 'அல்லாஹ்விடமிருந்து எவரும் என்னைப் பாதுகாக்க மாட்டார். அவனன்றி வேறு எவரிடமும் நான் ஒதுங்கிடமிடத்தை காணமாட்டேன் என்று நபியே கூறுவீராக' (72 : 22). ஒதுங்கிடத்தை அல்லாஹ்விடம் தேடுமாறு அல்லாஹ் கூறுவதற்கு மாற்றமாக நபியவர்களிடம் தேடுமாறு இப்பாடலில் கூறப்படுவது இணைவைத்தலன்றி வேறு என்னவாக இருக்க முடியும்?

'யா முஸ்தபா யா முர்தழா' என்ற பாடலில்...
எனது வறுமை, கவலை காரணமாகக் கையேந்துகிறேன்... என்னை நிரந்தரமான உதவிகொண்டு கவனித்து விடுங்கள்... மூழ்குவதற்கு முன் இந்த ஏழையைக் காப்பாற்றிவிடுங்கள்... உங்கள் தாராளத்தன்மையால் (பசி) எனும் எரியும் வெப்பத்தை அணைத்துவிடுங்கள்.

கடுமையான பசியோடு நபியவர்களின் கப்ருக்குச் சென்று தனக்கு உணவளித்து பசியாற்றுமாறு நேரடியாக நபியவர்களிடமே கேட்கிறார் இக்கவிஞர். அல்லாஹ்வே உணவளிப்பதாகவும் பசியாற்றுவதாகவும் அல்லாஹ் அல்குர்ஆனில் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகிறான். எனவே அல்லாஹ்விடம் செய்ய வேண்டிய முறைப்பாட்டை நபியவர்களிடம் செய்வது அல்லாஹ்வுக்கு இணைவைப்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்: 'பூமியிலுள்ள உயிரினம் அனைத்திற்கும் உணவளிப்பது அல்லாஹ்வின் பொறுப்பாகும்' (11 : 6). மேலும் அல்லாஹ் பின்வருமாறு கேட்கிறான்: 'அவன் தனது உணவை நிறுத்திவிட்டால் உங்களுக்கு உணவளிப்பவர் உண்டா? ' (67 : 21)

இவ்வாறான ஷிர்க்கான வரிகள் ஸுப்ஹான மௌலிதில் பக்கத்துக்கு பக்கம் காணப்படுகின்றன. விரிவஞ்சி ஒரு சில வரிகள் மட்டுமே இங்கு தரப்பட்டுள்ளன. இவை தவிர நபியின் வாழ்வில் நடந்திராத சம்பவங்களும் போலிக் கற்பனைகளும் பொய்களும் இந்த மௌலிதில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான ஒரு பாடல் தொகுப்பு எவ்வாறு பள்ளிவாசல்களுக்குள் வைத்து படிக்கப்பட முடியும்? 'பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்கு உரியவையாகும். ஆகவே அங்கு அல்லாஹ்வுடன் வேறு எவரையும் அழைக்காதீர்கள்' என்று அல்லாஹ் கூறுகிறான் (72 : 18). அல்லாஹ்வை மாத்திரம் அழைத்து பிரார்த்திக்க வேண்டிய பள்ளிவாசல்களுக்குள் நபியை அல்லாஹ்வின் அந்தஸ்துக்கு உயர்த்தி வைக்கும் இப்பாடல் தொகுப்பை எவ்வாறு பள்ளிவாசல்களுக்குள் வைத்து படிக்க முடியும்?

உண்மையை யார் கூறினாலும் அதை ஏற்று அறிந்து அதற்கேற்ப செயற்பட அல்லாஹ் அருள்புரிவானாக.

- அபூஸைனப் -

# மீலாத் விழாக் கொண்டாட்டம் : ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம்

நபிகளார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு தடவை 'நான் உங்களை மிகத் தெளிவான பாதையில் விட்டுச்செல்கிறேன். அந்தப் பாதையில் இரவும் பகல் போன்று தெளிவாகவே இருக்கும். அந்தப் பாதையிலிருந்து விலகிச் செல்பவர் தனக்குத் தானே அழிவைத் தேடிக்கொள்வார்' என்று கூறினார்கள் (முஸ்னத் அஹ்மத்). நபியவர்கள் நமக்குக் காட்டிய பாதை அந்தளவுக்கு தெளிவானதாக இருக்கும் போது சமூகத்திலுள்ள பலரோ அந்தப் பாதையை மாற்றி வேறு பாதை அமைக்க முயற்சிப்பது நிச்சயம் அழிவையே தேடித் தரும் என்பதில் ஐயமில்லை.

றபீஉல் அவ்வல் மாதம் பிறை 12 வந்துவிட்டால் நபி பிறந்த தினக் கொண்டாட்டம் என்ற பெயரில் அந்தத் தினத்தைப் பெருநாளாகக் கொண்டாடும் கலாசாரம் சமூகத்தில் பரம்பரை பரம்பரையாக பின்பற்றப்பட்டு வருகிறது. பலர் தாமும் புத்தாடைகள் அணிவதோடு, தமது குழந்தைகள், குடும்பத்தினருக்கும் புத்தாடைகள் வாங்கிக் கொடுத்து, நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் ஆகிய இரு பெருநாட்கள் மாத்திரமே கொண்டாடுமாறு பணித்த நபிகளாரின் பெயரிலேயே மூன்றாவது ஒரு பெருநாளை ஏற்படுத்தி வைத்துள்ளனர். 'நான் வகுத்துத் தந்த பாதையில் பயணியுங்கள்' என்று நபிகளார் கூறியுள்ளார்கள். இரு பெருநாட்கள் என்பது நபியவர்கள் வகுத்துத் தந்த பாதையாகும். அதை மீறி இவர்களோ மூன்றாவது பெருநாளை ஏற்படுத்தி வேறு ஒரு பாதை அமைத்திருக்கிறார்கள். அதுவும் அந்த நபியின் பெயரிலேயே...!

## நபியவர்கள் எத்தினத்தில் பிறந்தார்கள்?

நபியவர்கள் றபீஉல் மாதம் பிறந்தார்கள் என்பதை தெளிவுபடக் கூறும் இஸ்லாமிய அறிஞர்கள் எத்தினத்தில் பிறந்தார்கள் என்பதில் அதிகமான கருத்து வேற்றுமைகளைக் கொண்டிருக்கிறார்கள். பிறை 2ல் பிறந்தார்கள் என்று பிரபல ஹதீஸ் கலை அறிஞர் ஹாபிழ் இப்னு அப்தில் பர் போன்ற அறிஞர்களும் பிரபல இமாம்களான இமாம் மாலிக், இமாம் ஸுஹ்ரி, அல் ஹுமைதி ஆகியோர் பிறை 8ல் என்றும், பிறை 9ல் என்று சிலரும் ஹதீஸ் கலை அறிஞரும் வரலாற்றாசிரியருமான இப்னு அஸாகிர், இப்னு திஹ்யா போன்றோர் பிறை 10ல் என்றும் இமாம் இப்னு அபீ ஷைபா போன்றோர் பிறை 12ல் என்றும், பிறை 17ல் என்று சிலரும் பிறை 22ல் என்று சிலரும் தங்களது நூல்களில் குறித்து வைத்திருக்கிறார்கள்.

பிரபலமான இவ்வறிஞர்களின் கருத்து வேற்றுமைகளுக்கு மத்தியில் நபியவர்கள் பிறை 12ல்தான் பிறந்தார்கள் என்பதற்கு வலுவான ஆதாரங்கள் ஏதுமில்லை. சில அறிவிப்புகளில் நபியவர்கள் பிறை 12ல் பிறந்தார்கள் என்று காணப்பட்டாலும் அவை ஆதாரமற்றவை என்பது ஹதீஸ்கலை அறிஞர்களின் முடிவாகும். இக்கருத்துகளை இமாம் இப்னு அப்தில் பர் அவர்களின் 'அல் இஸ்தீஆப்', இமாம் இப்னு கதீர் அவர்களின் 'அஸ்ஸீரா அந்நபவிய்யா' மற்றும் 'அல்பிதாயா வந்நிஹாயா', இமாம் ஸபிய்யுர் ரஹ்மான் அல்முபாரக்பூரி அவர்களின் 'அர்ரஹீகுல் மக்தூம்' போன்ற மற்றும் பல வரலாற்று நூல்களிலும் காணலாம்.

ஆயினும் ஆச்சரியம் என்னவெனில் நபியின் பிறந்த தினம் எப்போது என்பது பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்களுள் பெரும்பாலானவர்களின் கருத்து நபியவர்கள் பிறை 9ல் பிறந்தார்கள் என்பதாகும். முக்கியமாக எகிப்தைச் சேர்ந்த பிரபல முஸ்லிம் வானியல் அறிஞரான மஹ்மூத் பாஷா என்பவர் தனது வானியல் கணிப்பீட்டின் அடிப்படையில் நபிகளார் றபீஉல் அவ்வல் மாதம் பிறை 9ல்தான் பிறந்தார்கள் என்று நிறுவுகிறார்.

நபியவர்கள் ஒருபோதும் தான் எத்தினத்தில் பிறந்தேன் என்பதைக் குறிப்பிடாமையினால்தான் இத்தனை கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. தான் திங்கட் கிழமை பிறந்தேன் என்றுதான் குறிப்பிட்டார்களே தவிர எப்பிறையில் அல்லது எத்திகதியில் பிறந்தேன் என்பதைக் குறிப்பிடவில்லை. ஒரு தடவை நபியவர்களிடம் திங்கட் கிழமை (ஸுன்னத்தான) நோன்பு நோற்பது பற்றி கேட்கப்பட்ட போது நபியவர்கள், 'திங்கட் கிழமையில்தான் பிறந்தேன், அத்தினத்தில்தான் நான் நபியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன்' என்று குறிப்பிட்டார்கள் (முஸ்லிம்).

நபியவர்கள் பிறந்த போது இஸ்லாம் இருக்கவில்லை. அதை அறிவிப்பதற்கு ஸஹாபாக்கள் இருக்கவில்லை. எனவே தனது பிறந்த திகதி பற்றி நபியவர்களே குறிப்பிடாத போது, அது குறித்த ஆதாரபூவமான தகவல்கள் இல்லாத போது, பெரும் பெரும் அறிஞர்களுக்கு மத்தியில் இது குறித்து அதிகமான கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்ற போது றபீஉல் அவ்வல் பிறை 12ல் நபி பிறந்த தினம் என்று கொண்டாடுவது எந்தளவு தூரம் அறிவுக்குப் பொருத்தமானது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதே வேளை நபியவர்கள் றபீஉல் அவ்வல் பிறை 12ல் மரணித்தார்கள் என்ற தகவல் ஆதாரபூர்வமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏனெனில் நபிகளார் மரணித்த போது இஸ்லாம் இருந்தது. அதைச் சுமந்த ஸஹாபாக்கள் இருந்தார்கள். அவ்வாறெனில் நபிகளார் மரணித்த தினத்தில்தான் கொண்டாட்டம் நடைபெறுகிறது என்பதை நாம் விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கிறதல்லவா?

நபியவர்கள் உயிர் வாழ்ந்த போது எத்தனையோ றபீஉல் அவ்வல் மாதங்களைக் கடந்திருப்பார்கள். ஒருபோதும் நபிகளார் தான் பிறந்த தினத்தில் இவ்வாறு கொண்டாடியதில்லை. அவர்களுக்குப் பின் அவர்களை தமது உயிரை விடவும் நேசித்த நான்கு கலீபாக்கள் சுமார் 30 ஆண்டுகள் இஸ்லாமிய அரசை ஆட்சிசெய்திருக்கிறார்கள். இக்காலங்களில் எந்தவொரு கலீபாவும் நபியின் பிறந்த தினம் பற்றிக் குறிப்பிடவோ, அல்லது றபீஉல் அவ்வல் மாதத்தின் ஏதாவது ஒரு தினத்தில் கொண்டாடியதாகவோ எந்தவொரு வரலாற்றுக் குறிப்பும் கிடையாது.

நபிகளாரை நேசிப்பதனால்தான் நபி பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறோம் என்று வாதிடுவோர் இவ்வுலகிலேயே நபியை மிக அதிகமாக நேசித்த ஸஹாபாக்கள் இவ்வாறு கொண்டாடவில்லை என்பது பற்றி என்ன கூறப்போகிறார்கள்?

## மீலாத் கொண்டாட்டத்தை யார் உருவாக்கினார்கள்?

நபியவர்களும் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடவில்லை, ஸஹாபாக்களும் கொண்டாடவில்லை, அவர்களுக்குப் பின்வந்தவர்களும்

கொண்டாடவில்லை என்றால், இக்கொண்டாட்ட கலாசாரத்தை உருவாக்கியவர்கள் யார் என்று ஆய்வு செய்து பார்க்கும்போது, ஸஹாபாக்கள், தாபஈன்கள் அனைவரும் மரணித்து பல நூற்றாண்டுகளுக்கு பின் தோன்றிய வழிகெட்ட ஷீஆக்களில் ஒரு பிரிவினரான பாதிமிய்ய ஆட்சியாளர்களே மார்க்கத்தில் இல்லாத இப்பாரம்பரியத்தை முஸ்லிம் சமூகத்தில் பரப்பிவிட்டார்கள் என்பதை அறிய முடிகிறது.

ஹிஜ்ரி 4ம் நூற்றாண்டில் எகிப்தை ஆட்சி செய்தவர்களே பாதிமிய்யர்கள். இவர்கள் ஷீஆக்களில் மிக மோசமான ஒரு பிரிவினரான இஸ்மாஈலிய்யாக்களின் கொள்கை அணியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் முஸ்லிம்களை வழிகெடுப்பதற்காக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது போன்று நடித்து வாழ்ந்த அப்துல்லாஹ் இப்னு மைமூன் அல் கிதாஹ் என்ற யூதனின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இந்த பாதிமிய்ய ஆட்சியாளர்களில் ஒருவரான அல்முஇஸ்ஸுலிதீனில்லாஹ் என்பவரும் அவருக்குப் பின்வந்த ஆட்சியாளர்களுமே நபி பிறந்த தினக்கொண்டாட்டம் என்ற பெயரில் இஸ்லாத்தில் அதற்கு முன் அறிமுகமாகியிராத கொண்டாட்டத்தை உருவாக்கினார்கள்.

இந்த பாதிமிய்ய ஆட்சியாளர்கள் தங்களது ஆட்சிக்காலத்தில் மேற்கொண்ட அக்கிரமங்கள் பற்றி இமாம் இப்னு கதீர் உள்ளிட்ட பல்வேறு இமாம்கள் தங்களது நூல்களில் பதிவுசெய்திருக்கிறார்கள். பள்ளிவாசல்களில் அபூபக்ர், உமர், ஆஇஷா (றழியல்லாஹுஅன்ஹும்) ஆகிய ஸஹாபாக்களை திட்டுகின்ற கலாசாரத்தை ஏற்படுத்தியமை, கியாமுல் லைல் தொழவிடாமல் எகிப்து மக்களை தடுத்தமை, ஹஜ்ஜுக்குச் செல்வோரை கொலைசெய்தமை, கஃபாவிலுள்ள ஹஜருல் அஸ்வத் கல்லை பிடுங்கியமை, இறந்த உடல்களை சாப்பிட எகிப்து மக்களை நிர்ப்பந்தித்தமை போன்ற அக்கிரமங்களை இவர்கள் புரிந்தார்கள்.

இத்தகையோர்தான், இரு பெருநாட்களை மாத்திரம் அனுமதித்திருக்கும் இஸ்லாத்தில் குழப்பத்தை உண்டாக்குவதற்காக மூன்றாவது பெருநாள் கொண்டாட்டத்தை நபி பிறந்த தினக் கொண்டாட்டம் என்ற பெயரில் உருவாக்கி, இஸ்லாத்திற்கும் அதன் தூதருக்கும் மாறுசெய்தார்கள். இத்தகைய கொடியவர்கள் ஏற்படுத்திய ஒரு வழிமுறை எவ்வாறு நல்லதாக இருக்க முடியும்?

ஷாபிஈ மத்ஹபின் இமாம்களுள் ஒருவரான இமாம் ஸஹாவி அவர்கள் குறிப்பிடும் போது, "நபி பிறந்த தினத்தைக் கொண்டாடுவது என்பது நபியவர்களால் சிறந்த நூற்றாண்டுகள் எனக் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் இருக்கவில்லை, அது பின்னரே உருவாக்கப்பட்டது" என்று குறிப்பிடுகிறார்கள். பிரபல ஹதீஸ் கலை மேதை ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள் குறிப்பிடும் போது, "மீலாத் கொண்டாட்டம் என்பது இஸ்லாத்தில் இல்லாத (பித்அத்தான) வழிமுறையாகும். முன் சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த யாரும் இதை கொண்டாடவில்லை" என்று குறிப்பிடுகிறார்கள். நபிகளாரின் வழிமுறையில் பயணிக்க அல்லாஹ் அனைவருக்கும் அருள்புரிவானாக.

**- ஏ.ஆர். முஹம்மத் றிஸ்வான் (ஷர்கி) -**

# ஐயமும் தெளிவும்

**ஐயம் :** உலகில் பல்வேறு தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவ்வாறிருக்கும் போது நம்மை இருளிலிருந்து ஒளியின் பக்கம் வழிகாட்டிய நபிகளாருக்காக பிறந்த நாள் கொண்டாடுவதில் என்ன தவறிருக்கிறது என்று சிலர் வாதிடுகிறார்களே...?

**தெளிவு :** மார்க்கத்தில் ஒரு செயலைச் செய்வதற்கு அல்குர்ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்துமே ஆதாரம் காட்டப்பட வேண்டும். பிற தலைவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டம் நமது மார்க்கத்துக்கு ஆதாரமாக முடியாது. எந்த ஒரு நபரினதும் பிறந்த தினத்தை கொண்டாடுமாறு அல்லாஹ்வோ, நபியவர்களோ நமக்கு வழிகாட்டவில்லை.

பலர் இன்று தங்களது குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். பிறந்த நாள் கொண்டாடுவது யூத, கிறிஸ்தவர்களின் கலாசாரமாகும். அவ்வாறிருக்கும் போது மார்க்கத்தைக் கொண்டு வந்த நபிக்கே யூத, கிறிஸ்தவர்களின் கலாசாரத்தை செயற்படுத்துவதா? 'யூதர்களினதும் கிறிஸ்தவர்களினதும் செயல்களில் ஈடுபட்டு அவர்களுக்கு ஒப்பாகிவிடாதீர்கள்' என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள் (முஸ்னத் அஹ்மத்). 'யார் பிற சமூகத்தவரின் செயற்பாடுகளைச் செய்து அவர்களுக்கு ஒப்பாக நடக்கிறார்களோ அவர்களும் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான்' என்றும் நபியவர்கள் கண்டித்தார்கள் (அபூதாவூத்). எனவே, மாற்று மதத்தவர் பிறந்த நாள் கொண்டாடுவது போன்று நாமும் நபிகளாருக்கோ, நமது குழந்தைகளுக்கோ பிறந்த நாள் கொண்டாடினால் நபியவர்களின் கூற்றுக்கு ஏற்ப இஸ்லாத்திலிருந்து நீங்கி, பிற சமூகத்தைச் சேர்ந்தவர்களாக மாறிவிடுவோம். அல்லாஹ் காப்பாற்றுவானாக.

அதே நேரம் நம்மை இருளிலிருந்து ஒளியின் பக்கம் வழிகாட்டிய நபியவர்களை எப்படி நாம் மதிப்பது, அவர்களுக்கு நாம் எவ்வாறு நமது நன்றிகளைத் தெரிவிப்பது என்று சிலர் கேட்கக் கூடும்.

நம்மை மனிதப் புனிதர்களாக மாற்றுவதற்காக நபிகளார் அல்லாஹ்விடமிருந்து இஸ்லாம் என்ற அணையாத ஜோதியை ஏந்தி வந்து, அதை பின்பற்றியொழுகுமாறு 23 வருடங்கள் பெருந் தியாகங்கள் செய்து நமக்குக் கூறிவிட்டுச் சென்றார்களல்லவா? அந்த மார்க்கத்தை கூட்டல், குறைத்தல் ஏதும் செய்யாது, நபியவர்கள் நமக்கு தந்துவிட்டுச் சென்ற பிரகாரமே நாம் நமது மரணம் வரை

பின்பற்றி வாழ்ந்தால், அதை விட நாம் நபிகளாருக்கு செய்யும் நன்றிக்கடன் வேறு என்ன இருக்க முடியும்?

நாளை மறுமையில் அல்லாஹ்வின் முன் அனைத்து மனிதர்களும் நிற்கும் போது தான் கொண்டு வந்த மார்க்கத்தை பின்பற்றியவர்களை அதிகமாக காண வேண்டும் என்றுதான் நபியவர்கள் இறுதி வரை ஆசைப்பட்டார்கள். அந்த மார்க்கத்தை பின்பற்றி நடப்பதனூடாகத்தானே நாளை மறுமையில் நபிகளாரை சந்தோஷப்படுத்த முடியும்? அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தில் இல்லாத பிறந்த நாள் கொண்டாட்டத்தை நடத்திவிட்டு மறுமையில் நபியவர்களை எவ்வாறு மகிழ்ச்சிப்படுத்த முடியும்?

ஒரு தந்தை தன் மகனுக்கு எல்லாவிதமான அறிவுரைகளையும் கூறுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அந்த மகனோ அவற்றை முழுமையாகப் புறக்கணித்து விட்டு அல்லது சிலவற்றை ஏற்று சிலவற்றைப் புறக்கணித்து விட்டு அல்லது அவரது அறிவுரைகளுக்கு மாற்றமாக வேறு ஒருவரின் கூற்றுகளை ஏற்றுக்கொண்டுவிட்டு, தந்தை மரணித்த பின் வருடத்துக்கு ஒரு தடவை அந்த தந்தையை நினைத்துப் பார்க்கிறான் எனில், இது தந்தைக்குச் செய்யும் நன்றிக்கடனா? அல்லது வெறும் கண் துடைப்பா? தந்தையை உண்மையாக நேசிக்கும் விசுவாசமுள்ள மகனென்றால், அவரது அறிவுரைகளை கூட்டாமல் குறைக்காமல் தனது மரணம் வரைக்கும் பின்பற்றியாக வேண்டும்.

நபியவர்களோ அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட ஸஹாபாக்களோ நபியின் பிறந்த நாளைக் கொண்டாடிய வரலாறே இல்லையென்றால், இதை விட ஓர் இறைவிசுவாசிக்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

**ஐயம் :** மௌலித் ஓதுவதற்கு அல்குர்ஆனில் ஆதாரம் இருப்பதாக சிலர் குறிப்பிடுகிறார்களே?

**தெளிவு :** அல்லாஹ்வின் பரிசுத்த வேதமான அல்குர்ஆனில் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறி, தங்களது தன்னிச்சையான செயற்பாடுகளை மக்கள் மத்தியில் நியாயப்படுத்த முற்படுவோர் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் வேதத்தில் பொய் கூறுவதுதான் பொய்களில் மிகப் பெரும் பொய்யாகும். இவ்வாறு பொய் கூறுவோருக்கு எதிராக நாளை மறுமையில் அல்குர்ஆனே வந்து அல்லாஹ்விடம் சாட்சி சொல்லும். அல்குர்ஆனில் 114 அத்தியாயங்கள் உள்ளன, 6000க்கும் மேற்பட்ட வசனங்கள் உள்ளன. எந்த ஓர் இடத்திலும் மௌலித் ஓதுமாறு எந்தவோர் இடத்திலும் இல்லை.

அல்குர்ஆனில் வருகின்ற பின்வரும் வசனத்தையே சிலர் மௌலித் ஓதுவதற்கு ஆதாரமாக காட்டுகிறார்கள். ‘நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் நபி மீது ஸலவாத் கூறுகிறார்கள். விசுவாசிகளே! நீங்களும் அவர்கள் மீது ஸலவாத் கூறுங்கள்’ (33 : 56 ). ஸலவாத் என்ற உயர்ந்த வணக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும் இந்த வசனத்தையே மௌலிதுக்கு ஆதாரமாக முன்வைக்கிறார்கள். ஸலவாத்திற்கும் மௌலிதுக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? உண்மையில் ஸலவாத் என்பது பற்றி ஒரு ஹதீஸையேனும் அறிந்தவர்கள் இவ்விதம் கூறமாட்டார்கள்.

ஸலவாத் என்பது நபிகளார் கற்றுத் தந்த ஒரு வணக்கமாகும். நபி மீது ஸலவாத் கூறுங்கள் என்ற மேற்குறித்த அல்குர்ஆன் வசனம் இறங்கிய போது ஸஹாபாக்கள் நபியவர்களிடம் சென்று ‘யாரஸூலல்லாஹ்! தங்கள் மீது ஸலவாத் கூறுமாறு அல்லாஹ் எங்களுக்கு கட்டளையிட்டுள்ளான். நாங்கள் எவ்வாறு ஸலவாத் கூற வேண்டும்? ’ என்று வினவிய போது நபிகளார் அத்தஹிய்யாத்தில் வருகின்ற ஸலவாத்தைக் கற்றுக்கொடுத்தார்கள் (புஹாரி, முஸ்லிம்).

எனவே, ஸலவாத் என்பது வஹி மூலம் அல்லாஹ் நபிக்கு கற்றுக்கொடுத்து, நபியவர்கள் நமக்குக் கற்றுத்தந்த வணக்கமாகும். மௌலித் என்பது சாதாரண கவிஞர்கள் இயற்றிய பாடல் தொகுப்பாகும். நபிகளார் கற்றுத் தந்த ஒரு வணக்கமும் மனிதக் கற்பனைகள் நிறைந்த சாதாரண பாடல் தொகுப்பும் எவ்வாறு சமமாகும் என்பதை சம்மந்தப்பட்டோர் சிந்திக்க மாட்டார்களா?

இன்னும் சிலர் இதையும் தாண்டி ஒரு படி மேலே சென்று மேலுள்ள குர்ஆன் வசனத்தை மொழிபெயர்க்கும் போது ‘அல்லாஹ்வும் மலக்குகளும் நபிமீது மௌலித் ஓதுகிறார்கள். ஆகவே நீங்களும் மௌலித் ஓதுங்கள்’ என்று மார்க்கம் பற்றிய அறிவில்லாத மக்கள் மத்தியில் குர்ஆன் வசனத்தின் பொருளை தங்களுக்கேற்றவாறு வளைத்துப் பேசுகிறார்கள். அல்லாஹ்வின் வேதத்தில் தங்கள் கைவரிசையைக் காட்டவும் விளையாடவும் தொடங்கிவிட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழி காட்ட வேண்டும் என்று பிரார்த்திப்போம்.


**உங்களது கணணி திருத்துவது சம்பந்தமான பிரச்சினையா?**

உங்களது கணணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு எங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் கணணிகளை இலகுவாக திருத்திக் கொள்ள முடியும். தேவைப்படின் அழையுங்கள் உங்கள் வீடுகளுக்கே வந்து நாம் எமது சேவைகளை வழங்கவும் காத்திருக்கின்றோம்.

**சேவைகள்**

01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues

**இன்றே அழையுங்கள்**
**0775673437**

**மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:**

**ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள,**

# பியூரோ போன் வேர்ல்ட்,

**இல.17, பிரதான வீதி, ஏறாவூர்**

Mobile: 077 8777774

Fax: 065 2240283

**மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.**


## ஐயமும் தெளிவும்

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்,த.பெ. இல: 02, ஏறாவூர்


**CGS**
College for Tech Studies
Inash Building (Near Jamiul Akbar Jummah Masjid),
Second Floor, Kadduppalli Road, Eravur
Tel: +94771834986 , +94759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணனி தகமைகளை **CGS** உடன் இணைந்து பெற்றுக் கொள்வதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**CGS இன் கணனி கற்கை நெறிகள்**

* Computer for Kids
* Certificate Course in Advertising & Graphic Designing
* Certificate in Computer Applications ( CCA )
* Certificate Course in Personal Computer Based Application Packages
* Certificate Course in Computer Hardware
* Certificate Course in Computer Networking & Administration

தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புகள் அவரவர் தேவைக்கேற்ப ஒழுங்கு செய்து கற்பிக்கப்படும்.

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள் 0771834986

ஒவ்வொரு வாரமும் சனி, மற்றும் ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.


## பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஏழு கேள்விகள்

1. நபியவர்கள் பேசுவது வஹி என்று கூறும் வசனம் எந்த அத்தியாயத்தில் இடம்பெறுகிறது?
2. இஸ்லாத்தில் இல்லாத மீலாத் கொண்டாட்டத்தை உருவாக்கியவர்கள் யார்?
3. இவ்வருடம் இலங்கையின் சுதந்திர தின விழா எங்கு கொண்டாடப்படவுள்ளது?
4. பிற சமூகத்தாரின் செயல்களைச் செய்வோர் பற்றி நபிகளார் என்ன கூறினார்கள்?
5. ஸஹாபாக்கள் நபியிடம் ஸலவாத் பற்றி கேட்டபோது நபியவர்கள் எதைக் கற்றுக்கொடுத்தார்கள்?
6. அல்லாஹ்வே உணவளிப்பவன் என்பதைக் கூறும் ஒரு குர்ஆன் வசனத்தைக் குறிப்பிடுக.
7. கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த கட்டார் மன்னரின் பெயர் யாது?

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **13.02.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். தெரிவுசெய்யப்படுவோர் பரிசு வழங்குதலை இலகுபடுத்துவதற்காக 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி : **தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:

**1ம் இடம் : AR. அப்றார் அஹ்மத், ஜிப்ரி தைக்கா வீதி, ஏறாவூர் 03**

**2ம் இடம் : MLM. இல்ஹாம், ஜின்னா வீதி, ஐயங்கேணி, ஏறாவூர்**

**3ம் இடம் : RM. அர்ஷாத், கிராமகோட் வீதி, ஏறாவூர் 6D**

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. AH. ஸஅத் ஹஸன், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் 03
2. BM. நாஷித், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் 03
3. TA. இஹ்ஸானுல் ஹக், RC வீதி, ஏறாவூர் 06A
4. AC. ஸப்னி ஹஸன், ம.ஃஹது நஜ்மில் உலூம், ஏறாவூர் 03
5. IM. பிர்தௌஸ், வாசிகசாலை வீதி, ஏறாவூர் 01A

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் :

1. முன்னைய சமூகம் கண்டிராத நோய், பஞ்சம்
2. திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டோர்
3. ஸுஃத்றா
4. இசை, நடனம், சிற்பம்
5. ஸுறா பனீ இஸ்றாஈல்
6. நபியின் சாபம்
7. கட்டார்

**வாசகர்கள் அனுப்பியுள்ள ஆக்கங்களுள் தரமானவை காலதாமதமேற்படினும் இன்ஷாஅல்லாஹ் அவ்வப்போது பிரசுரிக்கப்படும்.**